**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண்.28 /2013**

2023 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25–ம் நாள் திங்கட்கிழமை என்பவரது சாட்சியின் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சியசட்டப் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு T. சோழவேந்தன் B.A.,B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 25.09.2023 | தந்தை/கணவர் பெயர்: | கிருஷ்ணமூர்த்தி |
| பெயர்: | சட்டையப்பன் (PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நெய்தவாசல் | சமயம்: | |
| சாதி: | | வயது : | 48 /2023 |
| தொழில்: | | | |

**5 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி : 25.09.2023**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

7 ½ செண்ட் இடத்திற்கான பட்டா தான் புல எண்.54/2 இ என்றால் அது புதிய எண்ணாகும். நான் கொடுத்த மனுவின் அடிப்படையில் தான் பட்டா மாற்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் மற்றும் நில அளவையரின் அறிக்கைக்கு பிறகு தான் 7 ½ செண்ட் இருப்பதாக தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். முதலில் கண்ணப்பனுக்கு எதிராக மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். தாவா சொத்தை எந்த தேதியில் கண்ணப்பன் விலைக்கு கேட்டதாக தாவாவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு வடக்கில் கண்ணப்ப படையாச்சியின் தந்தை சிவபிரகாசம் படையாச்சி 3 ¼ -ஐ விலைக்கு பெற்றார்

என்றால் சரிதான். சிவபிரகாசம் படையாச்சி இறந்தபிறகு அவரது சொத்துக்களை வாரிசு அடிப்படையில் கண்ணப்பன் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். அந்த இடத்திற்கு கண்ணப்பன் படையாச்சி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 ¼ செண்ட் கண்ணப்பன் படையாச்சி நிலம் அவரிடம் தான் உள்ளது என்றால் சரிதான். கண்ணப்பன் இடத்திற்கு வடக்கே உள்ள இடம் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

மாரிமுத்து படையாச்சிக்கு 3 பிள்ளைகள் என்றால் கேள்விபட்டுள்ளேன். மேற்படி 3 பிள்ளைகளில் மகாலிங்கம் படையாச்சி, நாராயணசாமி மற்றும் சிவபிரகாசம் படையாச்சி என்றால் சரிதான். மேற்படி 3 பேரும் அவர் அவர்களுடைய சொத்துக்களை பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். ஆனால் சிவபிரகாசம் மட்டும் தான் சொத்தை அனுபவித்து வருகிறார். சிவபிரகாசம் அனுபவித்து வந்த சொத்து அவருடைய இறப்பிற்கு பிறகு அவரது மகன் கண்ணப்பனுக்கு கிடைக்கபெற்றது என்றால் சரிதான். தெட்சிணாமூர்த்தி - கிருஷ்ணவேனியிடமிருந்து கண்ணப்பன் விலைக்கு பெற்றுள்ளார் என்றால் கேள்விபட்டுள்ளேன். கண்ணப்பன் கிரய வாங்கிய வகையிலும் பாகமாக வந்த வகையிலும் 10 செண்ட் நிலம் உள்ளது என்றால் சரியல்ல.

கண்ணப்பன் புதியதாக வாங்கிய இடத்தில் மாடிவீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வீடு சுனாமி குடியிருப்பின் கீழ் கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கண்ணப்பன் அவருடைய இடத்தில் வீடு கட்டி கொண்டு மாடி கொட்டகை கட்டி கொண்டும் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். என்னுடைய இடம் 7 ½ செண்ட்டை நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுடைய இடத்தில் பிரதிவாதி எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது பாட்டி ராஜம்மாள் கிரயத்திற்கு வாங்கிய இடம் 7 ½ செண்ட் என்றும் அந்த இடம் தான் எங்கள் அனுபவித்தில் உள்ளது என்றால் சரியல்ல. நாங்கள் 7 ½ செண்ட் நிலம் வாங்கிய நிலையில் கூடுதலாக 2 ½ செண்ட் அபகரிப்பதற்காக இந்த வழக்கு தாக்கல்

செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள் இவ்வழக்கில் அவசியமற்ற தரப்பினர்கள் என்றும் அவர்களுக்கு எதிராக எவ்வித பரிகாரமும் வழங்க இயலாது என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.